பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 16] சென்னை: கார்த்திகை 1 (16—11—68) சனி ★ வெளியூர்: கார்த்திகை 2 (17—11—68) ஞாயிறு [இதழ்: 126

## உலக பாங்கித் தலைவர்

### அண்ணாவைச் சந்திக்கிறார்

சென்னை, நவ 16—

நவ. 22-ம் நாள் சென்னைக்கு வருகை தரும் உலக பாங்கித் தலைவர் இராபர்ட் மக்நமாரா முதலமைச்சர் அண்ணா அவர்களையும் பிற அமைச்சர்களையும் சந்தித்து உரையாடுவார்.

சென்னைச் சுற்றுப்புறங்களிலுள்ள தொழிற்சாலைகளை அவர் சுற்றிப்பார்ப்பார்; முக்கியமான தொழிலதிபர்களைச் சந்திப்பார்.

# ஐந்தாவது நிதிக் குழுவின் அநீதி

## மாநிலங்களின் கோரிக்கையை அலட்சியம் செய்தது

### மத்திய அரசுக்குச் சாதகமாகப் பரிந்துரை

புதுடில்லி, நவ. 16—

நிதிப் பங்கீட்டுத் துறையில், மத்திய அரசு -- மாநில அரசுகளுக்கிடையே ஓயாமல் 'போராட்டம்' நடைபெற்று வரும் இந்த நேரத்திலும்கூட, ஐந்தாவது நிதிக் குழு, மத்திய அரசுக்கு ஆதரவாகவே சிபாரிசு செய்திருக்கிறது.

மத்திய அரசின் வருமானங்களிலிருந்து ரூ. 650 கோடி அதிகப்படியாகத் தங்களுக்குத் தரவேண்டுமென மாநிலங்கள் கோரின; ஆனால், மானிய உதவியாக ரூ. 362 கோடி மட்டுமேதான் அதிகப்படியாகத் தர நிதிக் குழு சிபாரிசு செய்திருக்கிறது.

தற்போது மாநிலங்களுக்கு மானிய உதவியாக ரூ. 140.61 கோடி தரப்படுகிறது; இந்த உதவியை ரூ. 176.81 கோடியாக உயர்த்துமாறு நிதிக் குழு சிபாரிசு செய்திருக்கிறது.

மத்திய வரிகளில் மாநிலங்களின் பங்கை நிதிக் குழு உயர்த்தவில்லை.

இந்த ஆண்டில் மத்திய அரசு வரிகளிலிருந்து மாநிலங்கட்கு ரூ 454 கோடி கிடைத்துவருகிறது. வரிகள்மூலமாக வருமானங்கள் அதிகரிக்குமாதலால், மாநிலங்கட்குக் கிடைக்கும் பங்கும் ரூ. 495 கோடியாக அதிகரிக்கக்கூடும்.

ரிசர்வ் பாங்கியிடமிருந்து மாநிலங்கள் அதிகப் பற்று வாங்கியிருக்கின்றன; ஆகவே மாநில அரசுகள் அனுப்பும் 'செக்'குகளுக்கு ரிசர்வ் பாங்கி பணம்' கொடுக்க வேண்டாம் என்று நிதிக் குழு சிபாரிசு செய்திருக்கிறது; ஆனால் இதுவரையில் ரிசர்வ் பாங்கி மாநில அரசுகளின் 'செக்'குகளுக்குப் பணம் கொடுத்துவந்திருக்கிறது.

'செக்'குகள் திரும்ப அனுப்பப்படவில்லை; அப்படிச் செய்தால் அரசியல் சட்டத்தின் 350-வது விதியில் கூறப்பட்டுள்ள நிதி நெருக்கடி ஏற்பட்டுவிடும்.

"மத்திய அரசு அனுமதித்திருப்பதற்கு அதிகமாக ரிசர்வ் பாங்கியிலிருந்து மாநிலங்கள் அதிகப் பணம் பெறுவது அரசியல் சட்டத்திற்கு விரோதமானதாகும்" என்று நிதிக் குழு கூறியிருக்கிறது; இந்தப் பரிந்துரையின் அரசியல் விளைவுகளைக் கருதி, இவற்றை அரசு இன்னும் பரிசீலனை செய்து வருகிறது.

### நிதிக் குழு பரிந்துரை

மகாவீர் தியாகியைத் தலைவராகக் கொண்ட ஐந்தாவது நிதிக் குழுவின் இடைக்கால அறிக்கை மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது.

இதன்படி 1969—70-ம் ஆண்டில் மாநில அரசுகளுக்கு வரிகள் மூலம் கிடைக்கும் வருமானத்தின் பங்காக ரூ. 90.93 கோடி அதிகமாகக் கிடைக்கும்.

இதுவரையில் தமிழ்நாட்டுக்குக் கிடைத்துவந்த மானிய உதவியான ரூ. 6 84 கோடி இனியும் ஆண்டுதோறும் தொடர்ந்து கிடைக்கும்; இது தவிர, மேற்கொண்டு ரூ. 4.27 கோடி ஆண்டுதோறும் கிடைக்கும்.

சுங்க வரி போன்ற மத்திய வரி வசூலில் தமிழ்நாட்டுக்குக் கிடைக்கும் பங்குத் தொகை ரூ. 34 61 கோடியிலிருந்து ரூ. 38.88 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

## சேலம் உருக்காலைத் திட்டம்

### தமிழக அமைச்சர்களுடன் ஜப்பானியப் பிரதிநிதிகள் விவாதம்

### செய்தியாளரிடை நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, நவ. 15—

மருபேனி இடா குரூப் -- கவசாகி உருக்கு ஆலைகள் என்ற இரு ஜப்பானிய நிறுவனங்களைச் சேர்ந்த வெவ்வேறு தூதுக் குழுவினர், தமிழகத் தொழில் துறை அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், பொதுப்பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி ஆகியவர்களைச் சந்தித்தனர்.

சேலம் உருக்காலைத் திட்டம்பற்றியும், இரும்புக் கனியை ஏற்றுமதி செய்வதற்குக் கடலூர் துறைமுகத்தை வளர்ச்சியுறச் செய்வதுபற்றியும் தூதுக் குழுவினர் அமைச்சர்களுடன் விவாதித்தனர்.

முதலமைச்சர் அண்ணா அவர்கள் ஜப்பானுக்குச் சென்றிருந்தபோது, சேலம் உருக்காலை அமைவதற்கு முன்பாக சேலம் இரும்புக் கனியைப் பயன்படுத்துவது சம்பந்தமாக ஒரு திட்டத்தை மருபேனி நிறுவனத்தார், அவரிடம் அளித்திருந்தனர்; தாங்கள் அளித்த திட்டம்பற்றி அவர்கள், அமைச்சர்களுடன் பேசினர்.

"நான்காவது திட்டம் இன்னும் இறுதியாக்கப்படவில்லை; ஆகவே, அவர்களிடம் திட்டவட்டமான கருத்துத் தெரிவிக்க முடியவில்லை" என்று அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், சந்திப்புக்குப் பிறகு நிருபர்களிடம் கூறினர்.

மருபேனி தூதுக் குழுவினர் சென்னையிலிருந்து புறப்படுவதற்குமுன் சென்னை தொழில் வளர்ச்சிக் கார்ப்பரேஷனுடன் சேலம் உருக்காலை பற்றிப் பொதுவாக விவாதிப்பார்கள்.

### கடலூர் துறைமுகம் மூலம்...

கவசாகி என்ற நிறுவனம் இந்தியாவிலிருந்து நிறைய இரும்புக் கனியை இறக்குமதி செய்கிறது; கடலூர் துறைமுகத்தை இதற்காக அது பயன்படுத்தி வருகிறது.

ஜப்பானுக்கு இரும்புக் கனியை ஏற்றுமதி செய்வதற்குக் கடலூரில் உள்ள சிறிய துறைமுகத்தைப் பயன்படுத்துவதில் உள்ள சிரமங்களை கவசாகி தூதுக் குழுவினருடன் விவாதித்ததாக அமைச்சர் நெடுஞ்செழியன் கூறினர்.

இந்த விவாதங்களில் பொதுப் பணித் துறைச் செயலாளர் ஆர். திருமலை, கடலூர் கலெக்டர் மெனஸைஸ், கடலூர் துறைமுக டிரஸ்டின் தலைவர் மெக்ராத் ஆகியவர்கள் கலந்து கொண்டார்கள்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரையில் கடலூர் துறைமுகம் மூலம் 2.90 இலட்சம் டன் இரும்புக்கனி ஏற்றுமதி ஆகியது, இப்போது அது 90,000 டன்னாகக் குறைந்து விட்டது. கடலெழுச்சி குறைவாக இருக்கும்போது மணல் மேடுகளால் படகுகளுக்குக் குந்தகம் ஏற்படுவதே முக்கிய காரணமாகும்.

இந்தத் தடையை அகற்றுவதற்காக ரூ. 1 68 கோடி செலவில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருப்பதாகவும். ஏற்கனவே சுமார் 50 இலட்சம் செலவிடட்பட்டிருப்பதாகவும் தூதுக் குழுவிடம் விளக்கப்பட்டது.

இன்னும் 12 அல்லது 18 மாதங்களில் இந்தத் துறைமுகம் நாள் முழுவதும் பயன்படக் கூடிய விதத்தில் ஆகிவிடும்.

"கவசாகி நிறுவனத்திற்கு இந்தத் துறைமுகத்தில் உள்ள அக்கறை நீடிக்கும்" என்று தூதுக் குழுவினர் கூறினர்.

## மருத்துவமனைகளில் திடீர் சோதனை

### கடமை தவறிய டாக்டர்கள்மீது உடனடி நடவடிக்கை

### ஓரளவு பலன் தருவதாக அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா விளக்கம்

கும்பகோணம், நவ. 14—

அண்மையில் நான், ஒரு மருத்துவமனைக்குத் திடீரெனச் சென்றிருந்தேன்; அப்போது இரவு 11-30 மணி; அங்கு அனைவரும் தூங்கிக்கொண்டிருந்தனர்; 'காஷுவாலிட்டி' வார்டுக்குச் சென்றேன்; (காஷுவாலிட்டி வார்டு என்பது எந்த நேரமும் சிகிச்சை அளிக்கப்படக்கூடிய இடம்); அங்கு, மருத்துவ அதிகாரி படுத்திருப்பதாகச் சொன்னார்கள்; அவரைத் தட்டி எழுப்பினேன்; 'இங்கு இரண்டு மருத்துவ அதிகாரிகள் இருக்கவேண்டுமே -- இன்னொருவர் எங்கே' என்று கேட்டேன்; 'காபி சாப்பிட்டுவிட்டு வரப் போயிருக்கிறார்' என்று அங்கிருந்த நர்சுகள் தெரிவித்தனர்; 10 நிமிடங்கள் காத்திருந்தேன்; அப்போதும் அவர் வரவில்லை; பிறகு விசாரித்ததில், அந்த டாக்டர் சினிமாவுக்குப் போயிருந்ததாகத் தெரியவந்தது; அந்த டாக்டர்மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டேன் -- நடவடிக்கையும் எடுத்தோம்.

"இன்னொரு மருத்துவமனைக்குச் சென்றிருந்தேன்; அங்கும் திடீரெனத்தான் போனேன்; அப்போது காலை 8-15 மணி இருக்கும்; காலை 8-மணிக்கு அங்கு இருக்கவேண்டிய டாக்டர்கள் அங்கு இல்லை; நர்சுகளும் இல்லை; கம்பவுண்டரும் இல்லை; 'ஆயா'க்கள் இருந்தனர்; நேரத்தில் இல்லாததால் அவர்கள்மீது நடவடிக்கை எடுத்தோம்!

"இவ்வாறு நான் அடிக்கடி திடீர் திடீர் என்று மருத்துவமனைகளைப் பார்வையிட்டதால் ஓரளவுக்கு நற்பலன் விளைந்துள்ளது என்று கூறலாமே தவிர, இது சம்பந்தமாக முழு வெற்றி ஏற்பட்டுவிட்டதாகக் கூறமுடியாது; இன்னும் எவ்வளவோ முன்னேற்றம் ஏற்படவேண்டியிருக்கிறது."

இவ்வாறு குடந்தையில் நவ. 14-ம் நாளன்று நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில், தமிழக நலத் துறை அமைச்சர் சாதிக் பாட்சா குறிப்பிட்டார்.

## சீரணித் தொண்டர்கள்

### எண்ணிக்கை இரட்டிப்பாகும்

திருச்சி, நவ. 16—

சீரணித் தொண்டர்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குவதுபற்றித் தமிழக அரசு பரிசீலனை செய்துவருகிறது.

உள்ளாட்சித் துறை அமைச்சர் முத்துச்சாமி, நிருபர்களிடம் இந்தத் தகவலைக் கூறினர்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் சீரணி நல்ல முறையில் செயலாற்றிவந்துள்ளது என்றும், பல சமுதாய நலத் திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறது என்றும் அவர் கூறினர்.

## கடத்தல் பொருள் விற்பனைக்குத் தடை

### சட்டத்தில் உள்ள ஓட்டை அடைக்கப்படுமாம்

### மத்திய அரசின் காலங்கடந்த ஏற்பாடு

புதுடில்லி, நவ. 16—

கடத்தல் பொருள்களைக் கடைகளில் விற்பனை செய்வதைத் தடுக்க மத்திய அரசு, மசோதா ஒன்றைக் கொண்டு வருகிறது.

மக்களவையில் இத்தகவலைத் தெரிவித்த துணை நிதியமைச்சர் கே. சி. பந்த், 'தற்போதுள்ள விதிகளில் காணப்படும் குறைகளைப் புதிய சட்டம் நீக்கும்' என்றார்.

கடத்தல் பொருள்கள் தங்களுக்கு எங்கிருந்து கிடைத்தன என்பதை வெளியிடாமலிருக்கத் தற்போதைய விதிகள் வகை செய்கின்றன.

"1966-ல் ரூ. 3.21 இலட்சமும், அடுத்த ஆண்டில் ரூ. 5.87 இலட்சமும், நடப்பு ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூ. 13.57 இலட்சமும் பெறுமானமுள்ள பொருள்கள் கைப்பற்றப்பட்டன; செப்டம்பரில் ரூ. 3.56 இலட்சம் பெறுமானமுள்ள பொருள்கள் கைப்பற்றப்பட்டன" என்று அமைச்சர் தெரிவித்தார்.

## பீகாரில் இடைக்காலத் தேர்தல்

புதுடில்லி, நவ. 15—

பீகாரில் வருகின்ற பிப்ரவரி 9-ம் நாளன்று இடைத் தேர்தலை நடத்தலாமென்று தலைமைத் தேர்தல் ஆணையாளர் சென் வர்மா தீர்மானித்துள்ளார்.

# பணவீக்கமும் விலைவாசி உயர்வும் ஊழியர்களை வாட்டின!

## வாங்கும்சக்தி குறைந்ததால் வாழ்க்கைத்தரம் வீழ்ந்தது

### ஊதிய உயர்வு மட்டும் போதாது--- விலைவாசிகளையும் கட்டுப்படுத்த வேண்டும்

### நாடாளுமன்றத்தில் இரா. செழியன் வற்புறுத்தல்

புதுடில்லி, நவ. 16—

"பயன் தராத திட்டங்கள் -- பாழான செலவுகள் -- அளவுக்கு மீறிய பணவீக்கம் -- உயர்ந்துகொண்டே போகும் விலைவாசிகள் -- இவைகளுக்குக் காரணமாக அமைந்துள்ள மத்திய அரசாங்கம் -- இவைகள்மீது ஒரு கண்டனமாக இந்த வேலைநிறுத்தம் அமைந்தது.

"ரூபாயின் மதிப்புக் குறைவும், விலைவாசிகள் ஏற்றமும், கிடைக்கும் சம்பளத்தின் வாங்கும் சக்தியைக் குறைத்துவிட்டன; வாழ்க்கைத்தரமும் வீழ்ந்துவிட்டது; இந்த நலிவுகளைப் போக்க மத்திய அரசு தனது கவனத்தைச் செலுத்தவேண்டும்.

"பணப்புழக்கம் பெருகியபோதும் -- திட்டங்கள் நிறைவேறியபோதும் -- பெரிய முதலாளிகளுக்குக் கோடிக்கணக்கில் இலாபம் கொட்டியது; ஆனால் தொழிலாளர்கள் -- நியாயமான சம்பளம் பெறும் ஊழியர்கள் வாட்டப்பட்டனர்! ரூபாய் மதிப்புக் குறைவு நிலையான சம்பளக்காரர்களுக்குப் பாதகமாக அடைந்தது!

"பண வீக்கத்துக்கும் -- விலைவாசி ஏற்றத்துக்கும் -- ரூபாயின் சரிவுக்கும் -- ஊழியர்களின் அல்லலுக்கும் முழுப் பொறுப்பு இந்த மத்திய அரசுதான்!

"ஊதியத்தை உயர்த்துவதால் மட்டும் பிரச்சினை தீர்ந்துவிடாது! விலைவாசிகளைக் கட்டுப்படுத்தினாலன்றி, தரும் சம்பளத்துக்குப் பலன் கிடையாது! சம்பளத்தை உயர்த்தி, அதைவிட வேகமாக விலைவாசிகளை உயர அனுமதித்தால் பலன் ஏதும் இல்லை"

இவ்வாறு இரா. செழியன் அவர்கள், மத்திய அரசாங்க ஊழியர் வேலை நிறுத்தத்தையொட்டி நவ. 12-ம் நாள் மக்களவையில், மத்திய அரசுமீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது பேசுகையில் சுட்டிக்காட்டி வலியுறுத்தினர். அவர் ஆற்றிய உரை வருமாறு:—

#### உணராத ஒன்று அல்ல!

"அவைத் தலைவர் அவர்களே! இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் கலந்துகொள்கிற நாங்கள், இங்கே உள்ள எண்ணிக்கை விவரத்தை உணராமலில்லை. இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவருக்கும், விவாத முடிவில் வாக்கெடுப்பின்போது அமைச்சர்கள் பக்கம் எவ்வளவு பேர் என்பதும் --- எதிர்பக்கம் எவ்வளவு பேர்கள் என்பதும் தெரியாத ஒன்று அல்ல!

#### மாமந்திரிகள் நிலை அது!

எண்ணிக்கை பலத்தை வைத்துக்கொண்டு மாமந்திரிகள் மிக நம்பிக்கையுடன் இங்கு வீற்றிருக்கிறார்கள்!

**"நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டால், தைரியமாக அதைச் சந்திப்போம்"**

என்று நாடாளுமன்ற விவகார அமைச்சர் திரு. ராம் சுபாக் சிங், இரண்டு நாட்களுக்கு முன்பு பத்திரிகையாளர்களிடம் கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சிகளைச் சந்திப்பதில் காட்டுகின்ற நம்பிக்கையில் ஒரு பாதியளவாவது மத்திய அரசாங்க ஊழியர்களைச் சந்திப்பதில் காட்டி அவர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதில் காட்டியிருக்கலாம்.

இங்கு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைச் சமாளிப்பதில் காட்டுகின்ற தைரியத்தில் பத்தில் ஒரு பங்காவது அரசு ஊழியர்களின் பிரச்சினைகளைச் சமாளிப்பதில் காட்டியிருக்கலாம்.

#### மனச்சாட்சி அவசியம்

இவைகள் நடைபெற்றிருந்தால், செப்டம்பர் 19 வந்திருக்காது— அதன்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானமும் இங்கே விவாதத்திற்குத் தோன்றியிருக்காது!

**ஆக, எண்ணிக்கை பலத்தை மட்டும் வைத்து இந்தப் பிரச்சினையை அணுகாமல், எண்ண பலத்தை--சனநாயக உணர்வை — மனிதாபிமானத்தை— அவர்கள் மனச்சாட்சியைமுன்வைத்து இந்தப் பிரச்சினையைக் கவனிக்க வேண்டுகிறேன்.**

**மக்கள்தான் அரசாங்கத்தை அமைக்கிறார்கள்; மக்களில் ஒரு பகுதியினர் துன்புறும் பொழுது, அரசாங்கத்தின் ஒரு பகுதி நலிவடைகிறது என்று பொருள்.**

#### பிரச்சினைக்கு முடிவுகாண

செப்டம்பர் 19-ஆம் நாள் நடைபெற்ற சோகச் சம்பவங்களைப் பற்றி எனக்கு முன்னதாகப் பேசியவர்கள் கூறினர்கள்— 'அமைதியான நிலைமை மீண்டும் வரவேண்டும்' என்று கூறினர்கள்; 'அதற்கு, முன்பு இருந்த அமைதி கெட்டதற்கு என்ன காரணம்' என்று ஆராயவேண்டும்; '25 இலட்சம் மத்திய அரசு ஊழியர்களை அல்லற்படுத்திய பிரச்சினைகள் எவை என்று பார்த்தாலன்றி, பிரச்சினைக்கு முடிவு காண முடியாது.

#### அடிப்படைக் காரணம் என்ன?

திரும்பத் திரும்ப அதே நிலைமைகளை நாம் சந்திக்கிறோம். 1947, 1953, 1957, 1960—தொடர்ந்து வேலைநிறுத்தங்கள் வந்துள்ளன. 1960-ல் வேலைநிறுத்தம் நடைபெற்ற பின், ஊழியர்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் திரும்பப் பெறப்பட்டன; ரத்து செய்யப்பட்ட ஊழியர் சங்க அங்கீகாரம் திரும்பத் தரப்பட்டது; ஆக முக்கியமாக உள்ள பிரச்சினை, வேலைநிறுத்தங்களுக்கு அடிப்படையான காரணம் என்ன என்பதாகும்.

#### புதிதான வேண்டுகோள் அல்ல!

தேவையை நிறைவு செய்யும் குறைந்த சம்பளம் -- பஞ்சப்படியை நிர்ணயிக்கும் முறை -- இந்த இரண்டும் மிக முக்கியமான பிரச்சினைகளாகும்.

தேவைக்கான குறைந்த சம்பளம் என்பது புதிதான வேண்டுகோள் அல்ல; 1957-ல் இந்தியத் தொழிலாளர் மாநாட்டில் திரு. குல்சாரிலால் நந்தா அவர்களால் கொண்டுவரப்பட்ட ஒரு தத்துவமாகும்.

1960 பொது வேலைநிறுத்தத்திற்குப் பிறகு நாடாளுமன்றத்தில் தொழில் அமைச்சராக இருந்த குல்சாரிலால் நந்தா, இதற்கு விளக்கமும் தந்துள்ளார். தேவைக்கான குறைந்த சம்பளம் ரூ. 150 என்று அப்பொழுது கணிக்கப்பட்டது

#### 18 ஆண்டுகளாகியும்..

அரசியல் சட்டத்தின் 48-வது பிரிவைப் பார்த்தால், அதில், 'தொழில் துறை -- விவசாயம் -- மற்ற துறைகளில் உள்ள தொழிலாளர்களுக்கு வேலை -- வாழக்கூடிய சம்பளம் -- நல்வாழ்வுக்கான சூழ்நிலை' ஆகியவைகளை உண்டாக்கித் தர அரசு பாடுபடவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

அரசியல் சட்டம் நிறைவேறி 18 ஆண்டுகள் ஆகின்றன; ஆனால் அரசியல் சட்டத்தில் கூறப்பட்ட இந்த விதிமுறை இதுகாறும் கவனிக்கப்படவில்லை.

#### ஒரே ஒரு நோக்கம்தான்!

அரசியல் நோக்கத்துடன் இந்த வேலைநிறுத்தம் துவங்கப்பட்டதாகச் சிலர் கூறினர்கள். அரசியல் கட்சிகள் வேண்டுமானால் அரசியல் நோக்கத்துடன் இது பற்றிப் பேசலாம்; ஆனால், வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட ஊழியர்களுக்கு அரசியல் நோக்கம் எதுவும் இருக்கமுடியாது; அவர்களுக்கு இருப்பதெல்லாம் சம்பள நோக்கம் ஒன்றுதான்.

#### அரசின் தாறுமாறான கொள்கைகளை எதிர்த்து..

இதுபற்றி, டெல்லியிலிருந்து வெளிவரும் ஒரு நாளிதழின் கருத்தை இந்த அவையின் முன் வைக்க விரும்புகிறேன்; தலைமையமைச்சருக்கு வேண்டிய பத்திரிகை அது --- அமைச்சரவைக்கு நெருக்கமான பத்திரிகை --- 'நாஷனல் ஹெரால்டு' ஜுலை 29 ம் நாள் தலையங்கத்தில் பின்வருமாறு எழுதியுள்ளது:—

**"ஊழியர்களின் கோரிக்கைகளை தவருக எடுத்துக் கொள்ளக்கூடாது. அரசாங்கத்தின் தவருன பொருளாதாரக் கொள்கைகளை எதிர்த்து -- விலைவாசி ஏற்றங்களை எதிர்த்து -- தாறுமாருன அரசாங்கச் செலவுகளை எதிர்த்து -- எழுந்த ஒரு கண்டனமாக இந்த வேலை நிறுத்தம் இருக்கிறது."**

#### நடுநிலைமையாளரிடம் பிரச்சினையைவிட மறுத்ததேன்?

தேவைக்கான குறைந்த சம்பளம் என்பதைப் பற்றிப் பேசும்பொழுது--சிலர் கணக்கிட்டு -- 'அதை நிறைவேற்ற ரூ. 200 கோடி ஆகும்' என்று கூறுகிறார்கள்.

மற்ற தொழில் துறைகளுக்கும் விரிவுபடுத்தி, 'மொத்தம் ரூ. 700 கோடி செலவாகும்' என்று சிலர் கணக்கிடுகிறார்கள்.

இந்தப் பிரச்சினையை நடுநிலையாளரிடம்விட்டு, அவரிடம் இந்தக் கணக்குகளைக்கூறினால் என்ன?

வேலைநிறுத்தம் துவங்குவதற்கு அடிப்படைக் காரணமாக இருந்தது, நடுநிலையாளரிடம் தேவைக்கான குறைந்த சம்பளம் பற்றிய பிரச்சினையை விட மறுத்ததுதான்!

'இந்தப் பிரச்சினை நடுநிலையாளரிடம் விடமுடியாத ஒன்று' என அரசாங்கம் விடாப்பிடியாக மறுத்துவிட்டது!

நடுநிலைமைக்கு இந்தப் பிரச்சினையை அனுப்பி, 'இதை அமுல்படுத்த இவ்வளவு கோடி ரூபாய்கள் செலவாகும்--எங்களிடம் இவ்வளவுதான் பணம் உள்ளது' என்று வெளிப்படையாகக் கூறியிருக்கலாம்.

அரசியல் சட்டம் கூறிய விதிமுறைக்குக் கட்டுப்பட்டாவது இந்தப் பிரச்சினையை ஆராய்ந்திருக்கலாம்.

#### உதட்டளவில் கூறுவதா?

'தேவைக்கான குறைந்த சம்பளம் நல்ல திட்டம்' என்பதை உள்துறை அமைச்சர் ஒப்புக்கொள்கிறார்; ஆனால், 'அதை நிறைவேற்ற இயலாது' என்று கூறுகிறார்.

நிறைவேற்ற முடியாத ஒரு திட்டத்தை அரசியல் சட்டத்தில் ஏன் எழுதிக்கொள்ள வேண்டும்?

உதட்டளவில் நல்ல திட்டங்களைக் கூறும்பொழுது உங்கள் உள்ளத்தில் அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்ற அக்கறை இல்லையே!

இதைப்போலத்தான், 'மதுவிலக்குத் திட்டம் தேவை' என்று அரசியல் சட்டத்தில் எழுதி வைத்துக்கொண்டு, நிறைவேற்ற வழி காணுமல் -- நிறைவேற்றுவதற்கும் நிலையான உதவி தராமல் தடுமாறுகிறீர்கள்!

ஊழியர்களுக்குத் தரும் சம்பளத்தை நீங்கள் உயர்த்த வேண்டாம்; ஆனால் தருகிற சம்பளத்தை -- அதன் சக்தியை -- காப்பாற்றியாவது இருக்கலாம்.

1947-ல் மத்திய அரசாங்கத்தில் தரப்பட்ட குறைந்த சம்பளம் ரூ. 55; இப்பொழுது தரப்படும் குறைந்த சம்பளம் ரூ. 129.

ஆனல், 1947-ல் இருந்த ரூபாய் மதிப்பு இப்பொழுது சரிந்துவிட்டது; அப்பொழுது ஒரு ரூபாய் கொடுத்து வாங்கிய சாமான்களைப் பெற இப்பொழுது, 'மூன்று ரூபாய் கொடுத்தால்தான் முடியும்' என்ற நிலைமை உண்டாகியுள்ளது.

1947-ல் 55 ரூபாய்க்குக் கிடைத்த வசதிகளைப் பெற இப்பொழுது ரூ. 162 கொடுத்தாக வேண்டும்.

ஆக, 1947-ல் ரூ. 55 ஆக இருந்த சம்பளம் இப்பொழுது ரூ. 129 ஆகிவிட்டது என்ருல், அது உயர்வு அல்ல -- உண்மையான சம்பளத்தில் சரிவு என்றுதான் கூறவேண்டும்.

இந்தச் சம்பளச் சரிவுக்குப் பொறுப்பு மத்திய அரசாங்கமே!

#### மீளமுடியாத சுழலில் நாடு தள்ளப்பட்டுவிடும்

விலைவாசிகளைக் கட்டுப்படுத்தாமல், எண்ணிக்கை பலத்தை வைத்து நாடாளுமன்றத்தையும், மற்ற பலத்தை வைத்து வெளியிலுள்ள அதிருப்திகளையும் சமாளித்துவிடலாம் என்று அரசாங்கம் நினைக்கிறது; ஆனல், நிலையான சமாதானம் கிடைத்துவிடாது! அடிப்படைக் காரணம் நீடிக்கிற வரையில், பிரச்சினை வளர்ந்தபடிதான் இருக்கும்!

பொருளாதாரச் சீர்கேடு தொடர்ந்து மோசமானபடி இருந்தால், பிறகு மீளமுடியாத சுழலில் நாடு தள்ளப்பட்டுவிடலாம்!

#### அரசின் குழப்பத்திற்கு அடையாளமா இது?

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டவர்களை விதவிதமாக அரசாங்கம் பிரித்துப் பார்க்கிறது! முதலில், 'வேலைநிறுத்தக்காரர்கள் -- வேலைக்கு வந்த ஊழியர்கள்' என்று பிரித்துக் கணக்குக் கொடுத்தார்கள்; பிறகு வேலைக்கு வராத ஊழியர்களிடை, 'விசுவாசமுள்ள வேலைக்கு வராதவர்கள்' இருப்பதாகக் கூறினர்கள்; இத்துடன், 'அரைகுறை மனத்துடன் வேலைநிறுத்தத்தில்' ஈடுபட்டவர்கள்' இருப்பதாகத் தெரிவித்தார்கள்; இன்னும், 'தீவிர வேலை நிறுத்தக்காரர்கள்', 'தூண்டிவிட்ட வேலை நிறுத்தக்காரர்கள்', 'உண்மையான வேலை நிறுத்தக்காரர்கள்', 'அரைகுறையான வேலை நிறுத்தக்காரர்கள்' என்று பிரித்துப் பெயர் சூட்டுகிறார்கள்!

ஏன் இவ்வளவு பாகுபாடுகளை வகுத்துக் காட்டுகிறார்கள் என்று தெரியவில்லை! 'அரசாங்கம் குழப்பமடைந்திருக்கிறது' என்பதையே அவை குறிக்கின்றன!

இவ்வளவுக்கும், வேலைக்கு வந்தவர்கள்தான், அரசாங்கத்தின் கடுமைக்கு அதிகம் ஆளானர்கள்!

வேலைநிறுத்தத்தைத் தடுக்க மத்திய அரசு செய்யவேண்டுவது என்னவென்ருல், விலைவாசி உயர்வைத் தடுப்பதுதான்!

#### தண்டனை தரப்பட வேண்டியது யாருக்கு?

தண்டனை தரவேண்டியது ஊழியர்களுக்கு அல்ல -- விலைவாசி

(3-ம் பக்கம் பார்க்க)

# தூத்துக்குடியில் அணு மின் நிலையம்

## மத்திய அரசிடம் தமிழக அரசு வற்புறுத்தும்

### நான்காம் திட்டத்தில் 6.50 இலட்சம் பம்பு செட்டுகளுக்கு மின்சார வசதி

சென்னை, நவ. 16—

தூத்துக்குடியில் ஓர் அனல் மின்சார நிலையமோ, அணு மின்சார நிலையமோ நிறுவும் திட்டத்தை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கும்படித் தமிழக அரசு வற்புறுத்தும் என்று தெரிகிறது.

பெரும்பாலும் அணு மின்சார நிலையத்தை நிறுவவே தமிழக அரசு விருப்பங்கொண்டுள்ளது; ஏனெனில், நீர்விசை மின்சார நிலையங்கட்கும் -- அனல் மின்சார நிலையங்கட்குமிடையே உள்ள உற்பத்தி ஏற்றத்தாழ்வைக் குறைத்து, அந்தப் பகுதியில் நிலையான மின்சக்தி உற்பத்திக்கு வழி செய்ய அரசு எண்ணுகிறது.

தூத்துக்குடியில் ஓர் அனல் மின்சார நிலையம் ஏற்படுத்துவதற்கான யோசனையைத் தமிழக அரசு, மத்திய அரசுக்கு 1965 ஜூலையில் தெரிவித்திருந்தது; அப்போது அந்த யோசனையை ஆராய்ந்த மத்திய அரசின் துணைக் குழு, 'எண்ணூரில் அனல் மின்சார நிலையம் அமைப்பதே பொருளாதாரச் சிக்கனமுடையதாக இருக்கும்' என்று கருத்தறிவித்துவிட்டது.

நான்காம் திட்டத்தில் இத்திட்டம் குறித்தும், மாநிலத்தின் மின்சார உற்பத்திப் பெருக்கத்துக்கான திட்டங்கள் குறித்தும், தமிழக அரசின் அதிகாரிகள், அடுத்த வாரம் திட்டக் குழுவுடன் விவாதிப்பார்கள்.

**நான்காம் திட்டக் காலத்தில் தனது மின்சார உற்பத்திச் சக்தியில் 1,000 மெகாவாட் அதிகப்படுத்தத் தமிழக மின்சார வாரியம் எண்ணியுள்ளது**

**தற்போது தமிழக மின்சார வாரியத்தின் உற்பத்திச் சக்தி 1,000 மெகாவாட்டாக உள்ளது. மேலும் நெய்வேலி அனல் மின்சார நிலையத்தின் மூலம் 400 மெகாவாட் உற்பத்தியாகிறது.**

பாண்டியாறு—புன்னம்புழா நீர்விசை மின்சாரத் திட்டம் தொடர்பாகக் கேரள அரசுடன் ஓர் உடன்பாடு ஏற்பட்டுள்ளது. திட்டக் குழுவின் தொழில்நுணுக்க ஆலோசனைக் குழுவும் தனது கருத்தைத் தெரிவித்துவிட்டது. இத்திட்ட வேலைகள் இந்த ஆண்டே மேற்கொள்ளப்பட்டு மூன்றாண்டுக் காலத்தில் முடிக்கப்பட்டுவிடும் என்று தெரிகிறது.

ஒரு யூனிட்டுக்கு 50 மெகாவாட்ஸ் உற்பத்தி செய்யக்கூடிய இரண்டு யூனிட்டுகள் அமைக்கப்படும்.

எண்ணூர் அனல் மின்சார நிலையத்தின் முதல் யூனிட் 1969 ஜுன் மாதத்திலும், இரண்டாவது யூனிட் டிசம்பரிலும் உற்பத்தியைத் துவங்கும்; அவை முறையே 50 மெகாவாட்சும், 60 மெகாவாட்சும் உற்பத்தி செய்யக் கூடியவையாகும்.

மூன்றுவது, நான்காவது யூனிட்டுகள் (110 மெகாவாட் உற்பத்தி செய்யக் கூடியவை) முறையே 1970-ஆம் ஆண்டு ஜுன்—டிசம்பர் மாதங்களில் உற்பத்தி செய்யத் துவங்கும்.

**நான்காம் திட்ட காலத்தில், 2½ இலட்சம் பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் வழங்க, தமிழக மின்சார வாரியம் திட்டமிட்டிருக்கிறது.**

**ரூ. 62 கோடிச் செலவில் கிராமங்களுக்கு மின்சார வசதியளிக்கும் திட்டத்தில் ஒரு பகுதியாகும் இது.**

**ஒரு பம்புசெட்டு வைக்க ரூ. 2,500 தேவைப்படும். இத்தொகை, கடன் வழங்கும் நிறுவனங்கள் மூலம் கடனாகக் கொடுத்துதவப்படும்.**

**இத்திட்டம் வெற்றி பெறுமானால், 6½ இலட்சம் பம்புசெட்டுகள் நான்காம் திட்டக் கால இறுதியில் மின்சார வசதியைப் பெறும்.**

"நீர்விசை மின் திட்டப் பகுதிகளில் நீர் மட்டம் போதுமான அளவு இருப்பதால், வருகிற கோடையில் மின்சார வெட்டு நிச்சயம் வராது"

என்று மின்சார வாரியத்தைச் சேர்ந்த அதிகாரி உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

# மதுராந்தகம் வட்டத்தில் பஞ்ச நிலை

## அரிசி வெளியேற்றத்தைத் தடுக்க நடவடிக்கை

செங்கற்பட்டு நவ. 15—

மதுராந்தகம் தாலுகாவில் உணவுப் பொருள் நெருக்கடி ஏற்பட்டிருப்பதைத் தடுப்பதற்காக, மாவட்ட கலெக்டர் இலட்சுமிகாந்தன் பாரதி, ஓர் ஆலோசனை கூட்டம் நடத்தினர். கூட்டம் முடிந்ததும், அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:—

"தாலுகாவிலிருந்து வெளியிடங்களுக்கு அரிசி, நெல் எடுத்துச் செல்வதை தடுக்கச் சோதனை சாவடிகள் அமைக்கப்படும். இவ்வாறு அமைக்கப்படும் சோதனைச் சாவடிகளில் ஆயுதப் படைப் போலீசார் காவல் இருப்பார்கள்.

தாலுகாவிலிருந்து வெளியிடங்களுக்கு அரிசி எடுத்துச் செல்லக் கூடாது. நெல் ஆலைக்காரர்கள் தங்களிடம் கையிருப்பு உள்ள அரிசியைக் குறைந்த விலையில் விற்கவேண்டும்.

மதுராந்தகம் தாலுகாவில் 20 நியாயவிலைக் கடைகள் அமைக்கப்படும்; இதன் மூலம் ஒரு குடும்பத்திற்கு, வாரம் ஒன்றுக்கு 2 கிலோ அரிசியும், 4 கிலோ கோதுமையும் வழங்கப்படும்.

இதற்காக 80 டன் அரிசியும், 250 டன் கோதுமையும் ஒதுக்கப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களுக்கு, ஒரு கிராமத்திற்கு ஒரு மூட்டை அரிசியும், 2 மூட்டை கோதுமையும் கொடுக்கப்படும்.

அரிசி கடத்தலைத் தடுப்பதற்காக, 'பறக்கும் போலீசுப் படை'யும் அமைக்கப்பட்டுள்ளது

இந்தத் தாலுகாவில் 1 இலட்சம் ஏக்கர் நிலத்தில் கடந்த ஆண்டு பயிர் செய்யப்பட்டது; பருவமழை தவறியதால், இந்த ஆண்டு 20,000 ஏக்கர் நிலத்தில் மட்டுமே பயிர் செய்ய வசதி ஏற்பட்டது.

எனவே, மதுராந்தகம் தாலுகாவை பஞ்சப் பகுதியாக அறிவிக்க, தேவையான நிர்வாக அறிக்கை தயாரிக்கும்படி, தாசில்தாரிடம் கூறியிருக்கிறேன்

செங்கற்பட்டு மாவட்டத்திற்குத் தஞ்சை குறுவை நெல்லிலிருந்து மேலும் 10 000 டன் அரிசி கிடைக்கும் எனத் தெரிகிறது; இவற்றைக் கொண்டுவர அவசர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது."

# வேலை நிறுத்தத்தால் ஏற்பட்ட இழப்பு

## அஞ்சல் துறைக்கு ரூ. 16.66 இலட்சம்

புதுடில்லி, நவ. 15—

"மத்திய அரசு ஊழியர் வேலை நிறுத்தத்தின் விளைவாக, அஞ்சல்--தந்தித் துறைக்கு ரூ. 16.66 இலட்சம் நட்டம் ஏற்பட்டது"

என்று மக்களவையில், போக்குவரத்துத் துறை அரசாங்க அமைச்சர் ஐ. ஜே குஜ்ரால் தெரிவித்தார்.

"வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ஊழியர்கள்மீது இரக்கம் காட்ட வேண்டும்" என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோரினர்; அதற்குப் பதிலளிக்கையில் அமைச்சர் குறிப்பிட்டதாவது:—

"வேலை நிறுத்தத்தில், 1,23,000 பேர் ஈடுபட்டனர்; ஆனால், 1,100 பேர்கள் மீதுதான் நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

'ஆமை வேக வேலை இயக்கத்தினையொட்டி 200 பேர்கள் மீதுதான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது; இதனை திரும்பப் பெறும் நோக்கம் எதுவுமில்லை."

# இரா. செழியன் பேச்சு

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

உயர்வுக்குக் காரணமாக இருந்தவர்களுக்கு! கள்ளமார்க்கெட்காரர்களுக்கு -- கொள்ளை இலாபம் அடித்தவர்களுக்கு — வரி ஏய்த்தவர்களுக்கு — திட்டத்தின் பெயரால் பெரிய பொருளாதாரத் திண்டாட்டத்தை உண்டாக்கியவர்களுக்கு -- இந்த நாட்டைப் பொருளாதாரச் சீர்கேட்டிடம் ஒப்படைத்தவர்களுக்கு!

**இருபதாண்டுகளாக ஆண்டு இந்த நாட்டைச் சீரழித்து விட்டு அமைச்சரவையை அலங்கரித்துவரும் உங்களுக்குத் தண்டனை தரவேண்டுமே தவிர, வேறு யாருக்கும் இல்லை!**

## கொடுமைத் தலைவராக ஆக வேண்டாம்

'அரசாங்க நிர்வாகம் ஒரு குடும்பம்போல இயங்குகிறது' என்றும், 'அரசு ஊழியர்கள் குடும்ப உறுப்பினர்கள்' என்றும், 'அமைச்சர்கள் குடும்பத் தலைவர்கள்' என்றும் இந்த மாமன்றத்தில் கனம் உள்துறை அமைச்சர் ஒருமுறை கூறினர். அந்த முறையில் குடும்பத் தலைவராக இருக்க வேண்டியவர், கொடுமைத் தலைவராக ஆகவேண்டாம் என்று கூறிக்கொள்கிறேன்.

வெளிநாட்டுப் பகைவர்களிடம் காட்டவேண்டிய வீரதீரத்தை உள்நாட்டு ஊழியர்களிடம் காட்டவேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

## அமைதியான சூழ்நிலைக்கு வழிகோல முன்வருவீர்!

மீண்டும், அவர்களுடைய மனச்சாட்சிக்கு--நல்லதன்மைக்கு -- நான் வேண்டுகோள் விடுக்கிறேன் —ஆயிரக்கணக்கான ஊழியர்கள்மீது பழிவாங்கும் உணர்ச்சியை விட்டு, தள்ளிவைப்பது--நீக்கிவிடுவது--தண்டனை தருவதுபோன்ற உத்தரவுகளையெல்லாம் திரும்பப் பெற்று -- அமைதியான சூழ்நிலையை உருவாக்கி-பிரச்சினைகளுக்கு முடிவு காண பேச்சு வார்த்தைகளைத் துவக்குமாறு உள்துறை அமைச்சரையும், தலைமை அமைச்சரையும் கேட்டுக்கொள்கிறேன்."



# தமிழக மின்சார போர்டு

கீழே கண்டுள்ள பொருட்களும், உந்து (மோட்டார்) வண்டியும் அவை இருக்கும் நிலையில் அவைகளுக்கு எதிரே குறிப்பிடப்பட்ட நாட்களில் தமிழக மின்சார போர்டின் திருச்சி மத்திய பண்டகசாலையில் பொது ஏலம் விடப்படும்.

| எண் | ஏலம் விடப்படும் பொருள்களின் விவரம் | ஏலம் விடப்படும் நாளும் பொழுதும் |
|---|---|---|
| 1. | இரும்பு (எம்.எஸ்.ஜி ஐ.) டெல் மரம், ரப்பர் இன்னும் பிறவற்றின் கழிவுப் பொருட்கள் | 25—11—1968 காலை 10 மணி |
| 2. | ஸ்டுடிபேக்கர் 5 டன் எம். டி. எஸ். 3912 லாரி ஒன்றும் | 26—11—1968 காலை 10 மணி |

மேற்படி ஏலங்களின் நிபந்தனைகளை, தமிழக மின்சார போர்டின் மத்திய பணடகசாலையில் நோட்டீஸ் போர்டில் கண்டறியலாம்.

பொருட்களையும், மோட்டார் வண்டியையும் பார்வையிட விரும்புவோர் மேற்கூறிய மத்திய பண்டகசாலையில் அலுவலகத் தினங்களில்—அலுவலக நேரங்களில் அனுமதிக்கப்படுவர்.

கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு ஏலத்தையும் அல்லது எல்லா ஏலங்களையும் எவ்விதக் காரணமும் காட்டாமல் நிராகரிக்க உரிமை பெற்றவராவார்.

மேற்பார்வை பொறியாளர்
திருச்சி மின் திட்டம், திருச்சி


# ரூ. 1 கோடி கடன் திரட்டும் திட்டம்

## வீட்டு வசதி வாரியத்துக்கு அனுமதி

திருச்சி, நவ. 15—

குடியிருப்பு வசதித் திட்டங்களுக்காகப் பொதுமக்களிடமிருந்து ரூ 1 கோடி கடன் திரட்ட மாநில வீட்டு வசதி வாரியத்துக்கு ரிசர்வ் பாங்கி அனுமதி அளித்துள்ளது. கடன் திட்டம் விவரங்கள் தயாரிக்கப்படுகின்றன.

இத்தகவலை வீட்டு வசதிப் பொறுப்பை வகிக்கும் சட்ட அமைச்சர் செ. மாதவன் தெரிவித்தார்.

பாலக்கரையில் பீச்சாங்குளத்தில் சேரிச் சீர்திருத்தத் திட்டத்தின்கீழ் புதிய வீடுகளை அவர் திறந்துவைத்தார்.

இத்திட்டத்தின்கீழ் ரூ. 14.67 இலட்சம் செலவில் இதுவரை 127 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் 80 வீடுகள் அடுத்த பிப்ரவரி இறுதிக்குள் கட்டப்படும்.

"குடியிருப்பு வசதித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகையை தமிழ்நாடு முழு அளவில் பயன்படுத்துகிறது; எனினும் குடியிருப்பு வசதித் தேவையை நிறைவு செய்யமுடியவில்லை; குடியிருப்பு வசதித் திட்டங்களுக்காக அதிக தொகை ஒதுக்குவதன் அவசியத்தை மத்திய அரசிடம் மாநில அரசு எடுத்துக் கூறியிருக்கிறது" என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# ஆண்களை மிஞ்சும் பெண்கள்!

காரைக்கால், நவ. 15—

புதுவை மாநிலத்தில் இறுதியாகச் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களின்படி ஆண்களை விடப் பெண் வாக்காளர்கள் அதிகமாக இருக்கின்றனர்.

நான்கில் மூன்று பகுதிகளில் -- அதாவது காரைக்கால், மாகி, ஏனாம் பகுதிகளில் பெண் வாக்காளர்கள்தான் அதிகம்.

புதுவையில் மட்டும் பெண் வாக்காளர்களைவிட ஆண் வாக்காளர்கள் அதிகமாக இருக்கிறார்கள்.

185 சதுர மைல் பரப்புள்ள இந்தப் பகுதியில், மொத்தமுள்ள வாக்காளர்கள் 2,19,370-பேர்; இவர்களில் பெண்கள் 1,11,169 பேர் -- ஆண்கள் 1,08,201 பேர்.

இந்த மாநிலத்தில் டிச. 16-ம் நாள் நகராட்சித் தேர்தல்கள் நடக்கப்போகின்றன. மொத்தம் 16 கம்யூன்களிலிருந்து 200 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.



## சிறுவர் அரங்கம்

நவ. 17 ஞாயிறு மாலை
2, 4-15 மணிக்கு
'தபால்காரர்'
(முழு நீளச் சிரிப்புப் படம்)


# காலங் கடந்த ஞானோதயம்!

புதுடில்லி, நவ. 15—

"விஞ்ஞானிகளுக்கு நாம் ஊக்கம் அளிக்கத் தவறிவிட்டோம்; அவர்களுடைய மதிப்பை உணருவதில் பெரும் தவறிழைத்தோம்; இதன் காரணமாகத்தான் நமது விஞ்ஞானிகள் வெளிநாடுகளுக்குச் சென்று புகழும் பெருமையும் அடைகின்றனர்; இதைக் கருத்தில் கொண்டு நாம், இனி விஞ்ஞானிகளின் திறமைக்கு மதிப்பளிக்க முயலுவோம்"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி இங்கு 'விஞ்ஞான பவன்'த்தில் நடைபெற்ற நேரு நினைவுப் பேச்சுத் தொடரைத் துவக்கிவைத்துப் பேசுகையில், அறிந்து -- உணர்ந்து குறிப்பிட்டார்.

# நகராட்சி ஊழியர்கள் விதிமுறை

## நகல் திருத்தம் வெளியீடு

நகராட்சிகளில் பணியாற்றும் அதிகாரிகள் -- ஊழியர்கள் நியமனம், மற்றும் தண்டனை சம்பந்தமான விதிகளுக்கு நகல் திருத்தம் கெசட்டில் வெளியாகியிருக்கிறது.

மேற்படி ஊழியர்கள் தவறுதலாக அல்லது விதிகளுக்குப் புறம்பாக நடந்துகொண்டதன் காரணமாக நகராட்சிக்குப் பண நட்டம் ஏற்பட்டது என்று கண்டுபிடிக்கப்பட்டால், அவர்களுக்கு இதர தண்டனை விதிப்பதோடுகூட, நட்டம் முழுவதையுமோ அல்லது ஒரு பகுதியையோ அவர்கள் ஏற்க வேண்டும் என்றும் அதிகாரிகள் உத்தரவிடலாம்.

நகல் திருத்தம் கெசட்டில் வெளியான மூன்று கிழமைகளுக்குப் பிறகு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்; எதிர்ப்பு அல்லது யோசனை இருந்தால் கிராம வளர்ச்சி மற்றும் ஆட்சித் துறைச் செயலாளருக்கு எழுத வேண்டும்.

# ரூ. 1,67,400 கோடி!

## பதுங்கியுள்ள தங்கத்தின் மதிப்பு

இலண்டன், நவ. 15—

உலகம் முழுவதிலுமுள்ள எல்லா நாடுகளிலும் சேர்த்து மொத்தம் ரூ. 1 67,400 கோடி மதிப்புள்ள தங்கம் பதுக்கி வைக்கப்பட்டிருக்கிறதாம்! தங்கத்தைப் பதுக்குவது, மேலும் அதிகரிக்கக்கூடுமாம்!

# பள்ளித் தேர்வில் புதிய ஏற்பாடு

## பொது அறிவும் நல்லொழுக்கமும் வளர ஊக்கமளிப்பு

### கல்வித் துறையினருக்கு அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் யோசனை

சென்னை, நவ. 16—

"பாட நூல்கள் தவிர, பிற நூல்களைப் படித்தல், கையெழுத்து, விளையாட்டு, நடத்தை ஆகியவற்றுக்காக எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் மாணவர்களுக்கு மதிப்பெண்கள் வழங்குவது விரும்பத்தக்கதா என்று ஆராயுமாறு மாநிலக் கல்வி ஆலோசனைக் குழுவைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

"தற்போது மாணவர்கள் பயிலும் ஆறு பாடங்களுக்கான மொத்தம் 600 மதிப்பெண்களுடன் மேற்குறிப்பிட்ட நான்கிற்கும் மேலும் 200 மதிப்பெண்கள் (ஒவ்வொன்றுக்கும் 50 மதிப்பெண்கள்) ஒதுக்க வேண்டும் என்றும், ஒவ்வொன்றிலும் தேர்வுபெறக் குறைந்தபட்ச மதிப்பெண்களை நிர்ணயிக்க வேண்டுமென்றும் யோசனை கூறியிருக்கிறேன்"

என்று கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சென்னை நூல் நிலையச் சங்கத்தின் சார்பில் தேசிய நூல் நிலைய வாரத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் தெரிவித்தார். இது பற்றி அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"மேற்குறிப்பிட்ட நான்கு துறைகளில் மாணவர்கள் திறனை மதிப்பிடுவதில் ஆசிரியர்களுக்கு வேலை அதிகமாகும்; ஆனால் இம்முறையைப் பின்பற்றினால் மாணவர்கள் முழு அளவுக்கு எல்லாத் துறைகளிலும் முன்னேறுவதற்கு வழிகோலப்பட்டு விடும்.

மாணவர்கள்—ஏன், படித்த முதியோர்கூட, பிற நூல்களைப் படிக்கும் பழக்கத்தைக் கைக்கொள்ளாமலிருப்பது வருந்தத்தக்கது.

பரீட்சைகளுக்காகப் படிக்க வேண்டிய நூல்களில் ஒரு குறிப்பிட்ட பகுதியைத்தான் மாணவர்கள் படிக்கின்றனர். பரீட்சையில் தேர்வு பெறச் சில பகுதிகளைப் படிக்காமலேயே விட்டுவிட்டு ஆறு அல்லது ஏழு தலைப்புக்களைப் படித்துவிட்டுத் தேர்வு பெற்று விடுகின்றனர். பாட நூல்களில் பெரும் பகுதியைப் படிக்காமலேயே விட்டுவிடுகின்றனர்.

தற்காலத்தில் மாணவர்கள் பள்ளிக்குப் பாட நூல்களைக் கூட எடுத்துச் செல்வதில்லை; குறிப்புக்கள் எழுதுவதற்கான நோட்டுப் புத்தகங்களையே எடுத்துச் செல்கின்றனர்.

இதற்கு மாருக மாணவிகள், அன்று நடக்கும் பாடங்களுக்கான நூல்களுடன் மற்ற புத்தகங்களையும் சுமந்து செல்கின்றனர்.

நூல்களைப் படிக்கும் ஆர்வம் பெண்களிடையே அதிகமிருப்பதால் அவர்கள் மாணவர்களை விடப் பரீட்சையில் நன்கு தேர்வு பெறுகின்றனர்.

பள்ளிகளில் மாணவ - மாணவிகள் பிற நூல்களைப் படிக்க வசதிகள் அளிப்பதற்கான திட்டமொன்றை வகுக்க நூலாசிரியர்கள், பதிப்பாசிரியர்கள், நூல் நிலைய அதிகாரிகள் ஒத்துழைப்பைப் பெறுமாறு கல்வித் துறைஅதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளேன். பிற நூல்களை அதிகமாகப் படிக்கும்மாணவருக்குப் பரிசுகள் வழங்கலாம்.

நூலகத்தில் இருக்கும் புத்தகங்களைப் பார்த்தால் சிந்தனையைக் கிளறிவிடுகின்ற புத்தகங்கள் -- வாழ்க்கையை உயர்த்தும் அளவு அறிவு தரக்கூடிய புத்தகங்கள் அழுக்குப் படாமல் 10 ஆண்டுகளாக அப்படியே இருக்கின்றன; அதை யாரும் தொடுவதுகூட இல்லை.

ஆனால் நாவல்கள், சிறு கதைகள் எல்லாம் அழுக்குப் பட்டுப் பட்டு -- சில கதைப் புத்தகங்களில் அட்டைகூட இல்லாமல் இருக்கின்றன.

இந்த நிலை மாறினால்தான், மக்களுக்குப் பொது அறிவு ஏற்படும்; பொது அறிவு ஏற்பட்டால்தான் ஆழ்ந்த அறிவு ஏற்பட முடியும்.

அதற்கு உயர்நிலைப் பள்ளிகளிலேயே நூல்கள் படிக்கும் பழக்கத்தை மாணவர்கட்கு ஏற்படுத்த வேண்டும். அப்படி ஏற்படுத்தாத வரையில் நூலறிவு வராது.

மூன்றே முக்கால் கோடி தமிழர்கள் இருக்கிறோம்; ஆனால் நூல்கள் படிப்பது என்ற பழக்கம் ஆயிரத்திற்கு ஒருவரிடம்தான் இருக்கிறது.

நம் நாட்டில் வெளியிடுகின்ற நூல்களெல்லாம் சிங்கப்பூர், மலேயாவுக்குத்தான் அதிகம் அனுப்பப்படுகின்றன; அங்குள்ள தமிழர்கள்தான் படிக்கிருர்கள்.

இந்த நிலை மாறி, எல்லாரும் நூல்கள் படித்து --- நூலாசிரியர்களையும் வாழ்வித்து -- நாட்டு வளர்ச்சிக்குத் தாம் பெற்ற நூலறிவைப் பயன்படுத்த வேண்டும்."

## அமைச்சரின் யோசனைக்கு வரவேற்பு

### தலைமையாசிரியர்கள் கூட்டத்தில் ஆராயப்படும்

சென்னை, நவ. 15—

கையெழுத்து, நூல் நிலையப் படிப்பு, ஒழுக்கம், விளையாட்டு போன்ற நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கு எஸ்.எஸ்.எல்.சி.-யில் 200 மதிப்பெண்கள் கூடுதலாக ஒதுக்கவேண்டும் என்று கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தெரிவித்த யோசனை, சென்னை நகரிலும், மாவட்டங்களிலும் உள்ள உயர்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள், தலைமை ஆசிரியைகள் கவனத்தைக் கவர ஆரம்பித்துள்ளது.

அமைச்சரின் யோசனையைப் பற்றி ஆராய அடுத்த வாரம் கூட்டமொன்றை நகரத் தலைமையாசிரியர்கள் சங்கம் ஏற்பாடு செய்துவருவதாகத் தெரிகிறது.

இந்த யோசனை நல்லதுதான்; ஆனால், இதனைச் செயல்படுத்துவது தனிப்பட்ட ஆசிரியர்களின் மனோ நிலையைப் பெரிதும் பொறுத்திருக்கும்.

நூலக வேலைக்காக நேரங்களை மாணவர்களுக்கு ஒதுக்குவது எளிது; ஆனால், நூலகத்தில் ஒவ்வொரு மாணவனும் செய்த வேலையை ஊகிக்க வேண்டியதாகவே இருக்கும்.

ஒழுக்கத்தை மதிப்பிடுவது சம்பந்தப்பட்டவரை ஆசிரியர்கள் செல்வாக்குள்ள பெற்ருேர்களின் மனக்குறைக்கு ஆளாக நேரும் எனச் சில தலைமை ஆசிரியர்கள் கருதுகின்றனர்; எனினும், இந்த யோசனையைக் குறித்துக் கூட்டாகவும், தனித் தனியாகவும், பரிசீலிக்கத் தலைமை ஆசிரியர்கள் விரும்புகின்றனர்.

இந்த யோசனை சம்பந்தமாக மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்குமுன் தலைமை ஆசிரியர்கள் -- தலைமை ஆசிரியைகள் ஆகியோரின் கருத்துக்களை அறிய அரசு ஆவலாக இருப்பதாகத் தோன்றுகிறது.

## நடக்க இருப்பவை

### 17--11--68

**கடலூர்**

மஞ்சக்குப்பம் தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு நகராட்சி மார்க்கெட் திடலில்; தலைவர்: என். தேவராசு; பேசுவோர்: தேவகிபாண்டியன், இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ, வி. கிருஷ்ணமூர்த்தி எம்.பி., எஸ். சுந்தரம், ஆ. வேல்முருகன், கி. கோவிந்தராசன், சி. இராமச்சந்திரன், அதியமான்.

**புதுக்கோட்டை**

எம். ஜி. ஆர். ரசிகர் சிறுவர் மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு நைனுரிகுள மேல்கரையில்; தலைவர்: எம். இராமையா; பேசுவோர்: அ. தியாகராசன், எஸ் நெல்லைமாறன், சோம. காசிநாதன். (இரவு ரெஜிஞ—உதயகுமார் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

**இராசபாளையம்**

16-வது வட்ட தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு சின்ன சுரைக்காயப்பட்டி எம். ஜி ஆர். படிப்பகத் திடலில்; தலைவர்: சு. வேலு; பேசுவோர்: டி. கே. பொன்னுவேலு எம்.எல்.சி., இரா. த. இராமச்சந்திரன், மற்றும் பலர்.

**தூத்துக்குடி**

நகர தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு போஸ் திடலில்; தலைவர்: எவார்ட்ஸ் பர்ஞத்து; பேசுவோர்: கிரேசி சேவியர், இரா. கிருட்டினன், செ. இரத்தினசாமி, எம். ஞானபால்.

**வேலூர் (வ.ஆ.)**

25-வது வட்ட தி.மு.க. சார்பில் மாலை 6 வணிக்கு நல்லான் பட்டரை பெரிய தெருவில்; தலைவர்: பி. மோகனம்; பேசுவோர்: அமைச்சர் கே.ஏ. மதியழகன், கோ. விசுவநாதன், தோப்பூர் திருவேங்கடம், எஸ். முருகையன், ஆர்.என். அரங்கநாதன், தெ. சயரசம், ஏன். வீராசாமி, இறைமுடிமணி, வி.எஸ். பாண்டியன்.

**பாகூர்பேட்டை (புதுவை)**

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு மாரியம்மன் கோவில் எதிரில்; தலைவர்: த. அழகநாதன்; கொடியேற்றுபவர்: எம்.ஏ. சண்முகம்; அண்ணு படத் திறப்பு: ஈ. குபேர்; பேசுவோர்: இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ., எம். ஓ. எச். பருக், சி. பி. சி. திருநாவுக்கரசு, சு. ம. சுப்பராயன், கி. கோவிந்தராசன், எம். ஆனந்தன், மற்றும் பலர்.

### 18--11--68

**சௌந்திரவல்லிபாளையம்**

தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு; தலைவர்: இல.கோபால்; பேசுவோர்: சி. தமிழரசி, எஸ்.பி. பச்சையப்பன் எம்.எல்.ஏ., எம். தெய்வீகம் எம் பி., கொ. மாரியப்பன், கே. பெருமாள், கரீம், முத்தையன், நாச்சியப்பன், எஸ். மோகன், மு. செயராமன், தா.மு. நாராயணசாமி.

---

சென்னை மாவட்ட தி. மு. க. சார்பில்

## மேயர்-துணை மேயருக்குப் பாராட்டு

**17--11--68 ஞாயிறு மாலை 7 மணிக்கு**

9-வது வட்டம் மீஞட்சியம்மன்பேட்டையில்

தலைவர்: சு. பாலன்

பேசுவோர்: அமைச்சர்கள்

மு. கருணாநிதி | செ. மாதவன்

கே. ஏ. மதியழகன் | மா. முத்துசாமி

அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி.

—கூட்ட அமைப்பு: வண்ணைப் பகுதி தி.மு.க.

---

நலத்துறை அமைச்சர்

## எஸ். ஜே. சாதிக் பாட்சா

சுற்றுப்பயணம்

நவ. 17: மாலை 6 மணி: தூத்துக்குடியில் மேல்நிலை நீர்த் தொட்டிக்கு அடிக்கல் நாட்டல்.

நவ. 18: மாலை 4 மணி: இரண்டாவது உயர்மட்ட நீர்த் தேக்கத் திறப்பு விழா.

நவ. 19: மாலை 7 மணி: தரப்பாக்கம் ஊராட்சி வரவேற்பு — ஊராட்சி ஒன்றிய பள்ளிக் கட்டிடத் திறப்பு.

நவ. 20: மாலை 6-30 மணி: மாங்காடு உள்ளாட்சி வரவேற்பு; இரவு 7 மணி: பட்டு—பொது வரவேற்பு.

---

உள்ளாட்சி அமைச்சர்

## மா. முத்துசாமி

நிகழ்ச்சிகள்

நவ. 17: காலை 9-30 மணி: காஞ்சி—அண்ணு கவியரங்கத் தலைமை ஏற்றல்; பிற்பகல்—என். கிருஷ்ணன் எம்.எல்.ஏ ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகளில் பங்கேற்பு.

---

## கூட்டுறவுப் பண்டகசாலைக் கிடங்கு திறப்பு விழா

வட சென்னை கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையின் கிடங்குக் கட்டிடத் திறப்பு விழா 17—11—68 மாலை 6-மணிக்கு திருவொற்றியூர் நெடுஞ்சாலை இரயில்வே மேம்பாலத்துக்கு அடியில் திரு சி சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்; கூட்டுறவு அமைச்சர் திரு. செ. மாதவன் திறந்துவைப்பார்.

---

## சென்னை மாணவர் மன்றம்

### வள்ளுவர் — வள்ளலார் போட்டிகள்

சென்னை மாணவர் மன்றத்தின் சார்பில் மயிலை சிவமுத்து நினைவுக் கேடய வள்ளுவர் --- வள்ளலார் போட்டிகள்; உயர்நிலை--நடுநிலை--ஆரம்ப வகுப்பு மாணவர்கட்கான வள்ளுவர்-வள்ளலார் இறுதிநிலைப் போட்டிகள் மன்ற நிலையத்தில் 17—11—68 பிற்பகல் 2-30 மணியளவில் நடைபெறும்.

---

## குழுக் கூட்டம்

இராணிப்பேட்டை நகர தி மு க பொது உறுப்பினர் கூட்டம், 17—11—68 பிற்பகல் 2 மணியளவில், பாரி தொழிலாளர் சங்கக் கட்டடத்தில் நடைபெறும்" என்று செயலாளர் பி. சி. சுப்பிரமணி அறிவிக்கிருர்.

---

## மாராட்டிரத்தில் சேரி ஒழிப்பு

பம்பாய், நவ. 15—

சேரிப் பகுதிகளில் வாழும் பத்து இலட்சம் பேரை மாற்று இடங்களில் குடியமர்த்தும் திட்டம் ஒன்றை மாராட்டிர மாநில அமைச்சரவை பரிசீலனை செய்து ஒப்புதல் அளித்துவிட்டது.

---

## புதுவை மாநில நகராட்சித் தேர்தல்

### 102 இடங்களுக்கு 352 பேர் போட்டி

### நகர்நல முன்னணிக்கு தனிச் சின்னம்

புதுவை, நவ. 16—

டிச. 16-ம் நாள் புதுவை மாநிலத்தில் நடைபெறவிருக்கும் நகராட்சித் தேர்தலில் --- 102 இடங்களுக்கு 352 பேர் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளனர்.

புதுவை மாநிலத்தில் மொத்தம் எட்டு நகராட்சிகள் ('கொம்யூன்'கள்) உள்ளன; இவற்றில் உள்ள மொத்த வார்டுகளின் எண்ணிக்கை 102.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள 'நகர் நல முன்னணி'க்குத் தனிச் சின்னம் ஒதுக்கப்படும்; ஆனால் அச்சின்னமே அனைவருக்கும் கிடைக்கும் என்பதில்லை.

---

## வேளாண்மை வளர்ச்சிக்கு ரூ. 12 கோடி

### அமைச்சர் மாதவன் தகவல்

திருச்சி, நவ. 16—

"இந்த ஆண்டுத் தமிழ்நாட்டில் வேளாண்மை வளர்ச்சிக்காக ரூ 12 கோடி செலவிடத் தமிழக அரசு திட்டமிட்டிருக்கிறது"

என, சட்டத் துறை அமைச்சர் செ. மாதவன் அறிவித்தார்.

திருச்சிக்கு அருகே மருங்காபுரியில் மணப்பாறை வையம்பட்டியைச் சேர்ந்த விவசாயிகளுக்கு நில அடமான பாங்கி அளித்த ரூ. 2 இலட்சம் கடன் உதவிக்கான 'செக்'குகளை அமைச்சர் வழங்கினுர்.

சென்ற ஆண்டு திருச்சி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு ஒரு கோடியே ஒன்பது இலட்சம் ரூபாய் கடன் வழங்கப்பட்டதாகவும் இந்த ஆண்டு ஒரு கோடியே 80 இலட்சம் ரூபாய் கடன் வழங்கப்படும் என்றும் அமைச்சர் கூறினுர்.

---

## மறைவு

ஆரணி நகர தி.மு.க. உறுப்பினரும் பொதுநலத் தொண்டருமான தோழர் ந. கண்ணப்பன் (டைலர்) 2—11—68 அன்று இயற்கையெய்தினுர்; மறுநாள் கழகத் தோழர்கள் புடைசூழ சவம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது; அன்னுரைப் பிரிந்து துயருறும் அவர்தம் குடும்பத்துக்கு நகர தி மு.க. சார்பில் அனுதாபமும் ஆறுதலும் தெரிவிக்கப்படுகிறது.

---

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண. செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.